கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 18ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண். 3 /2025
இன்
அசல் வழக்கு எண்.253/2016
-----

1) மகேஸ்வரி
2) வாசுமதி ... மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1) சேது ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2) தமிழ்நாடு அரசு அதன்
மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்
3) தாசில்தார், திருப்பரங்குன்றம்
... 2, 3 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 18.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.K.செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 04.11.2025ம் தேதியன்று குறியீடு செய்யப்பட்ட Ex.A7 ஒப்பந்த உடன்படிக்கை ஆவணத்தை நிராகரிக்க வேண்டி கட்டளை 13 விதி 3ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :**

வாதி தரப்பில் PW–1 விசாரணை செய்து 7 ஆண்டுகள் கழித்து வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Reopen மனு அனுமதிக்கப்பட்டு, பதிவு செய்யாத முழுமையாக கையொப்பம் செய்யாத அதாவது 07.05.2009ம் தேதியிட்ட பத்திரத்தில் இரண்டாம் பக்கம் எந்தவொரு கையொப்பம் இல்லாத நிலையில் மேற்படி ஆவணம் கடந்த 04.11.2025ம் தேதியன்று Ex–A7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன ஆவணம் INADMISSIBLE NAD IRRELEVENT ஆகும் என்றும், மேற்படி ஆவணத்தை நிராகரிக்க உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அசல் வழக்கானது கடந்த 9 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வரும் நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழியான ஆட்சேபணையை பதிவு செய்து இம்மனுவில் உத்தரவு பிறப்பிக்க வேண்டப்பட்டு, வாய்மொழி ஆட்சேபணை மட்டும் கேட்கப்பட்டது.

4. இருதரப்பிலும் சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

5. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>** :

6. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.7 ஆவணமானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், வழக்கிற்கு சம்மந்தமில்லா ஆவணம் என்றும், எனவே வா.சா.ஆ.7 ஆவணத்தை நிராகரித்து உத்தரவிட வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி, வா.சா.ஆ.7 ஆவணமானது பதிவு செய்யாத ஆவணம் என்றும், கையொப்பம் முழுமையாக இல்லாத ஆவணம் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்ததில், வாதியும், 3ம் பிரதிவாதியின் தாயார் கருப்பாயி ஆகிய இருவருக்கும் இடையே வழக்கு சொத்து புல எண்ணில் உள்ள இடம் சம்பந்தமாக ஏற்பட்ட பதிவில்லா ஒப்பந்தம் ஆகும். மேற்படி ஒப்பந்தமானது பதிவு சட்டம் பிரிவு 17ன் கீழ் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணமாக காணப்படவில்லை. மேலும், மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் 3 பக்கங்கள் உள்ள நிலையில், 2வது பக்கத்தில் மட்டும் மேற்படி கருப்பாயி என்பவரின் கையெழுத்து காணப்படவில்லை. இந்நிலையில், மேற்படி ஆவணத்தை எவ்விதமான சாட்சியமாக எடுத்துக்கொள்ளாமல் நிராகரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது நிராகரித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.18 17:58:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.18 17:58:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 3 /2025
அசல் வழக்கு எண்.253/2016
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 18.11.2025